# பொதுக்காலம் 21 ஆம் வாரம்

## திருவழிபாடு ஆண்டு B

**இன்றைய வாசகங்கள்:**

யோசுவா நூலிலிருந்து வாசகம். 24:1-2,15-18,

பதிலுரைப்பாடல் திபா: 34: 1-2, 15-22,

திருத்தூதர் பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 5:21–32,

யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 6: 60-69

## திருப்பலி முன்னுரை:

ஆண்டவரை நான் எக்காலமும் போற்றுவேன்: அவரது புகழ் எப்பொழுதும் என் நாவில் ஒலிக்கும்.

ஆண்டவருக்குரியவர்களே, நம் இறைவனின் திருப்பெயரால் நல்வாழ்த்துக்கள் கூறி பொதுக்காலம் இருபத்தோராம் ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு உங்களை அன்போடு வரவேற்கின்றோம். இன்றைய இரண்டாம் வாசகத்தில் திருத்தூதர் பவுல், ஆண்டவருக்கு பணிந்திருப்பது போல ஒருவர் மற்றவருக்கு பணிந்து வாழ அழைப்பு விடுக்கிறார். கிறிஸ்து திருச்சபையின் தலையாய் இருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டும் பவுல், கிறிஸ்துவுக்கு பணிந்து ஒரே உடலாய் வாழுமாறு நமக்கு அறிவுரை வழங்குகிறார். கிறிஸ்துவின் வார்த்தையினாலும், திருமுழுக்கு நீரினாலும் கழுவப்பட்டுள்ள நாம் அனைவரும், கடவுள் முன்னிலையில் மாசற்ற, தூய வாழ்வு வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். இயேசு கிறிஸ்துவால் பேணி வளர்க்கப்படும் உடலின் உறுப்புகளாய் வாழும் வரம் வேண்டி, இந்த வாசகத்துக்கு செவிமடுப்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. வாழ்வின் ஊற்றாம் இறைவா,**

உம்மிடம் கொண்டுள்ள நம்பிக்கையால் நாளும் வளர்ந்து வருகின்ற உமது திருச்சபையினை வழிநடத்தி வரும் எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும், உம் மீதான நம்பிக்கையில் உறுதிபடுத்திக் காத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**2. உண்மையின் உறைவிடமாம் இறைவா,**

உலகிற்கு வாழ்வளிப்பதற்காக விண்ணகத்தில் இருந்து இறங்கி வந்த இயேசுவில் இந்த உலகம் முழுமையாக நம்பிக்கை கொள்ளவும், அதன் வழியாக நீர் அளிக்கும் நிலை வாழ்வை மக்கள் அனைவரும் பெற்று மகிழவும் உதவிபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**3. விடுதலை தருபவராம் இறைவா,**

தீராத நோய்கள், கடன் தொல்லைகள், மன வேதனைகள், பிரச்சனைகள் போன்றவற்றில் சிக்கித் தவிப்போர் அனைவரும், நம்பிக்கையோடு உமது உதவியை நாடவும், உம் இரக்கத்தால் அவற்றில் இருந்து விடுதலை பெற்று, வாழ்கின்ற உண்மை கடவுள் நீரே என்பதை அறிக்கையிடவும் உதவிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**4. எங்களை நீதியுடன் வழிநடத்தும் வெற்றி வேந்தனே!**

இன்றைய சமூகத்தில் காணப்படும் வேறுபாடுகள் நீங்கிச் சோம்பித் திரியாமல் எங்கள் கடின உழைப்பின் மூலம் குடும்பங்களின் வாழ்வு மலரவும், ஒவ்வொரு குடும்பமும் மனுகுலத்தின் புதையல் என்பதை உணர்ந்து, உம் பணியாளராக வாழவேண்டிய வரங்களைத் தரும்படியாக ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

**5. உயிரைச் சாவினின்று காக்கின்ற தந்தையே இறைவா!**

யாரும் நினையாத ஆன்மாக்களுக்கும், மரணத்தறுவாயிலுள்ள துன்புறும் அன்பர்கள் அனைவரும் இறைமகன் இயேசுவின் நிலையான அமைதியையும், பேரின்பவீட்டின் இன்பத்தையும் முழுமையாகப் பெற்றிட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**6. எங்கள் அன்பு தந்தையே இறைவா!**

சூழ்நிலையின் கைதிகளாகி துயரக் கடலில் வீழ்ந்து, நிலை வாழ்வைத் தேடும் நமக்குத் தேவையான நல்ல வழியை நற்கருணை ஆண்டவர் காட்டுகின்றார் என்பதனை உணர்ந்து, எம் இளைய சமுதாயம் உம்மை நாடிவர தேவையான இறைஅச்சத்தையும், ஞானத்தையும் வழங்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.